பரமக்குடி நகராட்சி
அலுவலகம்,
நாள்.30.10.2019

**நிகழும் திருவள்ளுவராண்டு அக்டோபர் மாதம் 31 ம் நாள் (31.10.2019) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் அக்டோபர் 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2019ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் அக்டோபர் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் அக்டோபர் 2019 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.5 | நகர்மன்ற தீர்மான எண். நாள். 30.09.2019ன்படி இந்நகராட்சி பொதுசுகாதார டிப்பர் வாகனம் TN65 AZ3856க்கு எப்சி பழுதுப்பணிகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 17.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.<br><br>(அட்டவணை கீழே)<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பழுதுப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குறைந்த தொகைக்கு பழுதுப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம். 3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

| வ. எண் | பழுதுப்பணிகள் விபரம் | என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி | செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|
| 1 | TN65 AZ3856 டிப்பர் வாகனத்திற்கு எப்சி பழுதுப்பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.75900/– | ரூ.77200/– |

**பொருள்.6**

நகர்மன்ற தீர்மான எண்.        நாள். 30.09.2019ன்படி இந்நகராட்சி பொதுசுகாதார கழிவு நீர் வாகனம் TN65 8052க்கு எப்சி பழுதுப்பணிகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 17.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | பழுதுப்பணிகள் விபரம் | என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி | செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி |
|---|---|---|---|
| 1 | TN65 8052 கழிவு நீர் வாகனத்திற்கு எப்சி பழுதுப்பணிகள் மேற்கொள்ளுதல் | ரூ.129700/– | ரூ.131500/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு பழுதுப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த தொகைக்கு பழுதுப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி வழங்கிய என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.7**

பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இயங்கி வரும் வாகனங்களை இயக்குவதற்கு நகர்மன்ற தீர்மான எண். 540, நாள். 25.07.2018 மற்றும் நகர்மன்ற தீர்மான எண்.        நாள். 28.06.2019ன்படி Exsernet , Madurai என்ற நிறுவனத்திடமிருந்து 10 ஓட்டுநர்களை கொண்டு மேற்கண்ட வாகனங்களை இயக்கப்பட்டு வருகின்றது. இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு 31.10.2019ந் தேதியுடன் முடிவடைகின்றது.

மேலும் பொது சுகாதார வாகனங்களை இயக்கும் பணிகள் மேற்கொள்ள புதிதாக ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு Financial BID திறக்கப்பட உள்ளது. புதிய நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஓட்டுனர் பணிகள் மேற்கொள்ளப்படும் வரை தற்போது பணிகள் மேற்கொண்ட வரும் Exsernet , Madurai என்ற நிறுவனத்திற்கு மேலும் ஒரு மாத காலத்திற்கு நவம்பர் 2019ம் மாதம் மட்டும் பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு –**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தற்போது பணிகள் மேற்கொண்ட வரும் Exsernet , Madurai என்ற நிறுவனத்திற்கு மேலும் ஒரு மாத காலத்திற்கு நவம்பர் 2019ம் மாதம் மட்டும் பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.8**

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட 36 –வார்டு பகுதிகளிலும் 100 டெங்கு மஸ்தூார் பணியாளர்களை கொண்டு டெங்கு தடுப்பு பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் 5 கோட்டங்களில் உள்ள வார்டு பகுதிகளில் நிலவேம்பு கசாயம் வழங்குவதற்கு தேவையான 5டீ கேத்தல் பாத்திரங்கள், 5 சில்வர் டிரேக்கள், 200 சில்வர் டம்ளர்கள், அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளின் மொட்டை மாடிகளில் ஏறி தேங்கிய தண்ணீர் அகற்றி டெங்கு பணிகள் மேற்கொள்ள ஏணிகள் மற்றும் வார்டு பகுதிகளில் பொது மக்களிடம் டெங்கு சம்மந்தமான விழிப்புணர்வு ஏற்படுத்த 2 ஸ்பீக்கருடன் கூடிய மைக் போன்றவைகள் அவசரமாக தேவைப்படுகின்றது.

<table>
<tr>
<td></td>
<td>பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் மேற்கண்ட பொருட்களை ரூ.50,000 உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளி கோரி கொள்முதல் செய்ய நகர்மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ரூ.50,000 உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தபுள்ளி கோரி கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td>
</tr>
<tr>
<td>பொருள்.9</td>
<td>இந்நகராட்சி பகுதியில் தற்போது வடகிழக்கு பருவமழையின் காரணமாக நகர்பகுதியில் மழை பெய்து வருகிறது. மழையின் காரணமாக அவ்வப்போது நகர் பகுதிகளின் தாழ்வான பகுதிகளான பொன்னையாபுரம், பாலன்நகர், காட்டுப்பரமக்குடி, பர்மாகாலனி, எம்.ஜி.ஆர்.நகர் மற்றும் முனியாண்டிபுரம் காலனி போன்ற பகுதிகளில் மழைநீர் தேங்கி வருகிறது. மேற்படி பகுதிகளில் யாவும் பின் தங்கிய மக்கள் வாழும் பகுதியாகும். இதனை அப்புறப்படுத்தும் பணிக்குத் தேவையான டீசல் என்ஜின் இந்நகராட்சியில் இல்லாததால் மழைநீரை வெளியேற்ற முடியாமல் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதால் பொதுமக்கள் நலன் கருதி புதிதாக இரண்டு எண்ணம் டீசல் எஞ்சின் மற்றும் அதற்குரிய உதிரிபாகங்கள் வாங்கவும் ஆகும் உதேச செலவினம் ரூ.60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்யவும், மன்றம் அனுமதிக்கலாம்.</td>
</tr>
<tr>
<td>பொருள்.10</td>
<td>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள ஈப்பு வாகனம் டி.என்.65 இசட்–9597 வாங்கி 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டதாலும், 3,76,333 கிலோ மீட்டருக்கு மேலும் இயக்கப்பட்டுள்ளதால், மேற்படி வாகனத்தில் அடிக்கடி பழுதுகள் ஏற்பட்டு செலவினம் கூடுதலாகி வருவதாலும், அலுவலக பணி நிமித்தமாகவும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் நகராட்சி மண்டல நிர்வாக அலுவலகம், மதுரையில் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் குறித்த நேரத்தில் செல்ல முடிவதில்லை. எனவே, மேற்படி ஈப்பு வாகனம் டி.என்.65 இசட்–9597க்கு பதிலாக புதிதாக ஈப்பு வாகனம் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.15,00,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td>
</tr>
<tr>
<td>பொருள்.11</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23, தலைமை நீரேற்று நிலையத்தில் சுற்றுச் சுவர்களை உயர்த்தியும், சுற்றுச் சுவற்றில் மழைநீர் சேகரிப்பு மற்றும் தூய்மை இந்தியா திட்ட விளக்கப்படங்களை வரையும் பணியை ரூ.2,20,100/– மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். நாள். .08.2019ல் அனுமதி அளித்ததின் பேரில் 11.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது, மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br><br>
<table>
<tr><td>1</td><td>திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்ததாரர்</td><td>0.08 சதவீதம் மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.எம்.சங்கர் ஒப்பந்ததாரர்</td><td>1.17 சதவீதம் மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
<br>அலுவலகக் குறிப்பு–<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் 0.08 சதவீதம் குறைவாக இருப்பதால் ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.</td>
</tr>
</table>

| | |
|---|---|
| பொருள்.12 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.8ல் குடிநீர் விநியோக பைப்லைன் அமைக்கும் பணியை ரூ.7,40,000/— மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்றத் தீர்மான எண். நாள். .08.19ல் அனுமதி அளித்ததின் பேரில் 11.10.19 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>\| 1 \| திரு.எம்.சங்கர் ஒப்பந்ததாரர் \| 2.82 சதவீதம் மதிப்பீட்டு ரேட்டை விட கூடுதல் \|<br>\| 2 \| திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்ததாரர் \| 0.08 சதவீதம் மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு \|<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு ரேட்டை விட 0.08 சதவீதம் குறைவாக இருப்பதால் ஏற்று மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.13 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள அண்ணா பேருந்து நிலையத்தில் இலவச கழிப்பறையில் மராமத்து பணிகள் மற்றும் கூடுதல் விளக்கு வசதிகள் செய்யும் பணியை ரூ.2,00,000/— லட்சம் மதிப்பீட்டில் செய்ய இந்நகர்மன்றம் தனது தீர்மான எண். நாள். ன்படி அனுமதி அளித்ததின் பேரில் 11.10.19ந்தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்<br><br>\| 1 \| திரு.எஸ்.சந்திரன் ஒப்பந்ததாரர் \| 0.05 சதவீதம் மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு \|<br>\| 2 \| திரு.எம்.சங்கர் ஒப்பந்ததாரர் \| 1.09 சதவீதம் மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் \|<br><br>அலுவலகக் குறிப்பு—<br>மேற்படி வரப்பெறுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.சந்திரன், ஒப்பந்தாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்று அனுமதிக்கலாம். |

**பொருள்.14**

இந்நகராட்சி கணினிப் பிரிவில் ஏற்கனவே இயங்கி வரும் ஜெராக்ஸ் மிஷின் மற்றும் பிரிண்டர்கள் அடிக்கடி பழுதாகி விடுவதால், கணினி பிரிவில் பணிகள் தேக்கமடைந்து விடுகிறது. மேலும் தற்சமயம் உள்ளாட்சி தேர்தல் நடைபெற இருப்பதால் அதிக அளவில் ஜெராக்ஸ் மற்றும் பிரிண்ட் எடுக்க வேண்டியுள்ளதால், புதிதாக ஜெராக்ஸ் மிஷின் ஒன்றும், HP LASERJET PRINTER WITH SCANNAR ஒன்றும், EPSON M200 பிரிண்டர் ஒன்றும் வாங்கவும், அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம், மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்யவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள்.15**

நகர்மன்ற தீர்மான எண். நாள்– 30.08.2019–ன் படி இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இயங்கி வரும் வாகனங்களை 10 ஒட்டுநர்களை கொண்டு இயக்கும் பணிகள் மேற்கொள்ள 10.10.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி களின் தொழில் நுட்ப புள்ளிகள் 11.10.2019 அன்று தொழில் நுட்பபுள்ளிசரிபார்த்தல் படிவம் மூலம் சரிப்பார்க்கப்பட்டு அதில் தகுதி வாய்ந்த நிறுவனங்களின் விலை குறிப்பிட்ட புள்ளிகள் (Financial bid) 15.10.2019 அன்று சுகாதார அலுவலரால் வந்திருந்த ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. திறக்கப்பட்ட விலை குறிப்பிட்ட புள்ளிகள் (Financial Bid) விபரம் பின்வருமாறு

| வ எண். | நிறுவனத்தின் பெயர் | நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு கூலி | இதர படிகள்(EPF,ESI,LWF, யூனிபார்ம், மற்றும் நிர்வாக செலவினங்கள் | மொத்த விலை |
|---|---|---|---|---|
| 1. | Exsernet,Madurai | ரூ.528 | ரூ.139 | ரூ.667 |
| 2. | AVM Service Print Rajapalayam | ரூ.529 | ரூ.139 | ரூ.668 |

மேற்கண்டவாறு விலை குறிப்பிட்ட புள்ளிகள் (Financial bid) வரப்பெற்றுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவின்படி மாவட்ட ஆட்சியர் தினக்கூலி ஊதிய விகிதத்துடன் கூடுதலாக EPF,ESI,LWF, யூனிபார்ம், மற்றும் நிர்வாக செலவினங்கள் போன்றவற்றிற்காக 26.25 % தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கணக்கீடு செய்த வகையில் தினக்கூலி ரூ,530+இதர படிகள் (26.25 %) ரூ,139= ரூ.669 என உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் மேற்காண் பணி மேற்கொள்ள குறைந்த பட்சமாக ரூ.667 தொகை குறிப்பிட்டுள்ள Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு அரசு வழிகாட்டுதலின் படி பணி உத்தரவு வழங்கிட நகர்மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக் குறிப்பு–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த பட்சமாக ரூ.667 தொகை குறிப்பிட்டுள்ள Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு அரசு வழிகாட்டுதலின் படி பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
3) செலவினத்தை பொது நிதி அல்லது SWM பயனாளர் கட்டணத்திலிருந்து மேற்கொள்ளலாம்.

**பொருள்.16**

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரரிடம் 2019–20ம் ஆண்டில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி மற்றும் சேவைவரிக்கான தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு இணையதள சேவை மூலமாக பதிவு செய்ய வேண்டும். மேற்கண்ட பதிவு செய்வதற்கான செலவினத் தொகையினை சங்கமம் அசோசியம் உரிமையாளர் திரு.கே.நாகராஜன் என்பவருக்கு 2019–20 ஆண்டுக்கான உரிய தொகையினை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம், மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி

# மன்றப்பொருள்

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரரிடம் 2019–20ம் ஆண்டில் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி மற்றும் சேவைவரிக்கான தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு இணையதள சேவை மூலமாக பதிவு செய்ய வேண்டும். மேற்கண்ட பதிவு செய்வதற்கான செலவினத் தொகையினை சங்கமம் அசோசியம் உரிமையாளர் திரு.கே.நாகராஜன் என்பவருக்கு 2019–20 ஆண்டுக்கான உரிய தொகையினை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம், மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்